ISSN : 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed

UGC CARE LIST

UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India

Volume : 07, Issue : 01/03 - March 2023

==========================================================================

# தருமபுரி மாவட்ட போயரின மக்களின் நம்பிக்கைகள்

==========================================================================

**ஆய்வாளர்**
**வெ.சதீஸ்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*சேலம்-636 011.*

**நெறியாளர்**
**முனைவர் ரா.தேவணன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*பெரியார் பல்கலைக்கழகம்*
*சேலம்-636 011.*

==========================================================================

**முன்னுரை**

போயரின மக்கள் சமூகமாக வாழத் தொடங்கிய நிலையில் பல்வேறு சூழல்களில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் போன்றவை மக்கள் வாழ்கின்ற சூழ்நிலைக்ககேற்றாவாறு மாறுபடுகின்றன. பண்பாடு அடிப்படையில் இவ்வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. பண்டையகாலம் முதல் மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வருகிறான் இயற்கை மாறுதலுக்குகேற்ப மனித மனமும் மாறுபடுகிறது. இயற்கையோடு இணைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கை தோன்றின பழக்கவழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை அறிவியல் கருவி ஆகியவை காரணமாக சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் பொழுது அவை சடங்காக மாறுகின்றன அவ்வகையில் தருமபுரி மாவட்டப் போயரின மக்களின் நம்பிக்கையை பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

பழங்காலத்தில் நாடோடியாக நிலையின்றி சுற்றுத் திறந்த ஆதி மனிதன் இயற்கையைக் தனக்கு மிஞ்சிய சக்தியாக நினைத்தான் இயற்கை பொருட்கள் அனைத்தையும் மதித்து வணங்கி அதனோடு இணைந்தொரு வாழ்க்கையை வாழ்ந்தான்

இவ்வாறு இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழத் தொடங்கிய மனிதனை தீ புயல் சூறாவளி போன்ற இயற்கை சீற்றங்களும் கொடிய விலங்குகளும் அச்சுருத்தின எனவே அவைகளை தனக்கு மிஞ்சிய சக்தியாக கருதினான். இத்தகைய அச்சத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு பல்வேறு விதமான செயல்களை செய்தான். அச் செயல்களின் மூலம் தனக்கு வரும் பாதிப்புகளிலிருந்து விடுபடலாம். என்பது அவனது நம்பிக்கையாக இருந்தது. இந்த நம்பிக்கைகள் காலப்போக்கில் மனிதர்களின் வாழ்வில் நிலைபெற்றவுடன் மேலும் பல நம்பிக்கையும் தோற்றுவித்து அதன் பின்னர் மக்களின் தங்களின் வாழ்வியல் முறைக்கு ஏற்றவாறு பல்வேறு நம்பிக்கையினை உருவாக்கிக் கொண்டனர். அத்தகைய நம்பிக்கைகளே மனிதன் பல்வேறு செயல்களுக்கு அடிப்படையாக அமைகிறது அவற்றில் சிறு சிறு மாற்றங்களும் ஏற்பட்டாலும் இன்று வரை அவை ஒரு குறிப்பிட்ட இடத்தைக் வகிப்பதைக் காண முடிகிறது நம்பிக்கைகளே வழிபாடுகளின் தோற்றத்திற்கு காரணமாக அமைகிறது.நம்பிக்கை பெரும்பாலும் அச்ச உணர்வின் காரணமாக அடிப்படையில் தோன்றியதாக காட்சியளிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுது மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிக்கு காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றை படைத்த காரணம் கற்பிக்க கொள்கிறது அவைகளை நம்பிக்கை நம்பிக்கைகளாக உருவாகின்றன

**குறிப்புச் சொற்கள்**

போயர். நம்பிக்கை சூறாவளி தீ புயல் பழக்கவழக்கம் நிமித்தம் சகுனம் சமுதாயம் தத்துவம் .

**நம்பிக்கை- விளக்கம்**

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் தோன்றின அது மனிதனின் அன்றாட வாழ்வில் இரண்டாக கலந்துள்ளது மனிதன் எச்செயல்களை செய்தாலும் அச்செயல்கள் அனைத்தும் அவன் சார்ந்துள்ள இனக்குழுக்களின் பழக்கவழக்கங்களை வெளிப்படுத்தும் தன்மை பெற்ற பெற்றதாக அமைந்துள்ளன "**நம்பிக்கை ஏல காரணமாக இருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவே பொய்யாகவே இருக்கலாம் ஆனால் அவை நம்பிக்கைகள் இருப்பது உண்மை அவை மெய்ப்பிக்க தக்கவை என சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்**"[1]

**நம்பிக்கையின் வகைகள்**

நம்பிக்கைகளைப்பொதுவாக நம்பிக்கை மூடநம்பிக்கை என இரண்டு வகைகளாக பிரித்தாலும் ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை மற்றொரு சமுதாயத்தின் நோக்கில் மூடநம்பிக்கையாகத்தென்படலாம் அதேபோன்று சமுதாயத்தின் நம்பிக்கைகளை வகைப்படுத்தும் முறையில் காரண காரியத்தொடர்போடு நிறுவப்படுவன நிறுவப்படாத என இரு வகைகளாக பகுத்துக் காண்பதே சிறப்பானதாக தென்படுகிறது என்று காந்தி குறிப்பிடுகிறார்

**நம்பிக்கை - அகராதி விளக்கம்**

நம்பிக்கை என்னும் சொல்லுக்கு நர்மதாவின் தமிழ் அகராதி **"சத்தியம் நிஜம் விசுவாசம் அனுபவம் ஏற்படுத்தும் உறுதி *turth genuine loyalty faith*"**[2] என்ற பொருட்களை தருகின்றது நம்பிக்கை என்னும் சொல்லுக்கு மெய்யப்பன் தமிழ் அகராதி **"விசுவாசம் ஆணை உறுதிப்பாடு உண்மை நம்பியப்பு விற்கப்பட்டது"**[3] என்ற பொருள்களை தருகின்றது

**பண்டைய தமிழரின் நம்பிக்கைகள்**

***"மக்களின் அறிவு நம்பிக்கை கலை ஒழுக்கம் சட்டம் வழக்கம் முதலியவை பண்பாடாக மலர்கின்றன என்கிறார் மானிடவியல் பேரறிஞர் டெய்லர் (Tayior). அவர்களின் வாழ்க்கை முறைகளின் கூட்டு சேர்க்கை பண்பாடு என்கின்றார் மனிதனின் சடங்குகள் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் இதன் தன் அடங்கி விடுகின்றன பழக்கவழக்கங்களும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் பண்பாடு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம் அறிவு நிலைக்கு அப்பாற்பட்டை எண்ணங்களே நம்பிக்கைகள் என்கின்றார் சு. சக்திவேல்"***[4]

**தத்துவமும் நம்பிக்கையும்**

"***சில நம்பிக்கைகளுக்குத் தத்துவம் ஆதாரமாக இருந்து வருகின்றது நம் முன்னோர்கள் காலையில் தன் கண்விழித்தும் நம் இரு கைகளையும் விரித்துப் பார்த்தால் அவசியம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளனர் வேதங்களுக்கு எல்லாம் உள்ளங்கையில் பொரிந்து இருக்கிறது வேதங்கள் வடமொழியிலும் சமஸ்கிருதத்திலும் இல்லை அவை யாவும் படைப்புகளில் அடங்கியுள்ளன என்பது கருத்து சேவை செய்தால் அது புலனாகும் தேவை என்பது கை தேய்ந்து போகும்போது தழும்புகள் உண்டாகும் போது பிரம்மா தலையில் எழுதியிருப்பது தெளிவுறும் நாம் அதை படிக்கலாம் இதன் வழி நம்பிக்கையும் தத்துவம் ஒன்றிணைந்து உள்ளமை அறிய இயலும்***"[5] என பி நாராயணன் குறிப்பிட்டுள்ளார்.

**போயரின மக்களின் நம்பிக்கை**

தருமபுரி மாவட்டப் போயிரின மக்களின் முக்கிய தொழில் கட்டுமானம் தொழில் என்பதால் இயற்கை மனிதர்கள் விலங்குகள் பறவைகள் சமுதாயம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பை பெற்றிருக்கின்றனர் இதனால் தான்இவர்களின் வாழ்வை அதிகப்படியான நம்பிக்கைகளுடன் பின்னிப்பிணைந்துள்ளனர் இவர்களிடம் இயற்கை மனிதர்கள் விலங்குகள் பறவைகள் நாட்கள் செயல்கள் போன்றவை குறித்தும் பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன மக்களிடம் காணப்படும் முக்கிய நம்பிக்கைகளை நிமித்தம் பற்றியவையாகும்

**சகுனங்கள் பற்றிய நம்பிக்கை**

பண்டைய தமிழ் மக்கள் சகுனத்தை நிமித்தம் புல் .ஆகிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர் நிமித்தம் என்பது வாழ்வின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும் நிமிர்த்தங்கள் அனைத்தும் நம்பிக்கையின் பாற்பட்டன நிமிர்த்தங்களை அவற்றின் செயல்பாட்டின் விளைவு கருதி நன் நிமித்தம் தீநிமித்தம் என இரு வகைகளாக பிரிப்பர் இதனை போயரின மக்கள் நல்ல சகுனம் தீய சகுனம் என வழங்கி வருகின்றனர் ஒரு செயலை தொடங்கும் போது நல்ல சகுனம் தோன்றினால் அச்செயல் நன்மையாக முடியும் என்று தீய சகுனம் தோன்றினால் தோல்வியடையும் என்று நம்புகின்றன தருமபுரி மாவட்டப் போயரின மக்கள் சகுனங்களில் பெரும் நம்பிக்கையுடையவர்களாக திகழ்கின்றன அவற்றிற்குரிய காரண காரிய தொடர்பு தெரிய விட்டாலும் முன்னோர்கள் நம்பியதால் அதனை பின்பற்றி வருகின்றனர்

***நாளும் புல்லும் பிறவற்றினிமித்தமும்( தெல்.பொ.நூ.91)***

***நற் சகுனம்***

தருமபுரி மாவட்டப் போயிரின மக்கள் **“கோயில் மணி சத்தம் கேட்டல் சுமங்கலி பெண் எதிரில் வருதல் அணில் வீட்டிற்குள் நுழைதல் பசுவின் மடியில் கன்று பால் குடிப்பதைக் கானல் காகம் இடபக்கத்தில் இருந்து வலப்பக்கம் செலுத்தல் நற்காரியம் செய்யும் பொழுது மழை பெய்தல் பல்லி கத்துதல் மங்கல இசை கேட்டல் போன்றவற்றை நல்ல சகுனங்களாக கருதுகின்றனர்”** [6] என தகவலாளர் வெங்கடாசலம் கூறுகிறார்.

***தீய சகுனம்***

நோயாளியைக் குணமாக்க மருத்துவரிடம் அழைத்துச் செல்லும் பொழுது நாய் மலம் கழிப்பதை தீய சகுனமாகக் இம்மக்கள் கருதுகின்றனர் பூனை குறுக்காகச் சென்றால் தீய சகுனமாக கருதி மீண்டும் வீட்டிற்கு திரும்பி விடுவார் நல்ல காரியத்திற்கு செல்லும் பொழுது விறகு சுமந்தவர்கள் எதிரில் வந்தால் தீய சகுனமாக கருதுகின்றனர். தருமபுரி மாவட்டப் போயிரின மக்கள் வீட்டை விட்டு வெளியில் புறப்படும் பொழுது கோடாரி சுத்தி கடப்பாரை பாம்பு விறகு சுமை போன்றவற்றை காண்பது தீய சகுனமாக கருதுகின்றனர்.

***திருமணம் பற்றிய நம்பிக்கைகள்***

போயரினமக்கள் ஆடி மாதத்தில் பெண் பார்த்தாலும் திருமணம் தொடர்பான செயல்பாடுகளும் செய்தால் தீமை நேரிடும் என்று நம்புகின்றனர் திருமணமான பெண் கணவன் வீட்டில் நுழையும் போது வலது காலை எடுத்து வைத்து நடக்க வேண்டும் ஒரு வீட்டில் இரண்டு திருமணங்கள் ஒரே நாளன்று நடைபெற்றால் ஒரு குடும்பம் சிறக்கும் மற்றொரு குடும்பம் தாழ்ந்து நிலையை அடையும் என்பார் திருமணம் மணமக்களை மஞ்சள் கலந்த அரசியால் வாழ்த்துதல் வேண்டும். கணவன் வீட்டிற்கு வந்தவுடன் உப்பு

*நெல் போன்ற தானியங்களில் கை வைக்க வேண்டும் இதனைப் போன்று திருமணம் பற்றிய நம்பிக்கை போயரின மக்களிடையே மிகுதியாக காணப்படுகின்றன.*

**தெய்வம் தொடர்பான நம்பிக்கைகள்**

*நல்ல பாம்பை அடித்தால் அதனை புற்றில் போட்டு பால் ஊற்ற வேண்டும் இல்லை எனில் பாம்பு மீண்டும் உயிர் வந்து பழிவாங்கும் என்றும் இவ்வின மக்கள் நம்புகின்றனர் கனவில் அமாவாசை தினங்களில் காத்து கருப்பு முனி போன்றவைகள் மிகுதியாக இருக்கும் என நம்புகின்றனர் மக்கள் நோய்களிலிருந்து விடுபட பெரியாண்டிச்சி அம்மனுக்கு ஆட்டுக்கிடையை நேர்ந்துவிடுகிறார் இத்தகைய நம்பிக்கையை பண்டைய கால முதல் தற்போது வரை வழக்கில் உள்ளன.*

***மந்திரம் தொடர்பான நம்பிக்கைகள் ( lmitative)***

*பிள்ளைகளை சனியனே என்று திட்டக்கூடாது அவ்வாறு திட்டினால் சனியன் பிடித்து துன்புற வேண்டும் என்று நம்புகின்றனர் பிணத்தை எடுத்து செல்லும் பொழுது எல்லிறைத்தால் அந்த எல்லை பொறுக்கிக் கொண்டு வருவதற்குள் பொழுது விடிந்து விடும் என்ற என்றும் இறந்தவர் பேயாக வர மாட்டார் என்று நம்புகின்றனர் பில்லி சூனியம் மூலம் கை கால்களை செயலிழக்க செய்ய முடியும் என்று நம்புகின்றனர் வீட்டில் வாசலில் வெள்ளருக்கு இருந்தால் பேய் அண்டாது என்ற நம்பிக்கை கொள்கின்றன வீட்டில் புற்று வளர்ந்தால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை தெரிவிக்கின்றனர் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு இறைச்சி எடுத்துச் செல்லும் பொழுது ஒரு இரும்புத்துண்டு மிளகாய் போன்றவற்றை உணவில் போட்டு எடுத்துச் செல்வன் அதனால் பேய் நெருங்காது என்று கூறுவர் எலுமிச்சையும் சிவப்பும் இருந்தால் பேயை விரட்ட முடியும் என்று நம்பி நம்புகின்றனர் விரும்பும் பெண்ணின் காலடி மண் மற்றும் தலைமுடி இவற்றை எடுத்துச் சென்று சூனியம் செய்பவரிடம் கொடுத்தால் அவர் செய்யும் வித்தையின் மூலம் அப்பெண்ணை அடைய முடியும் என்று நம்புகின்றனர்*

***விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்***

*போயிரின மக்களின் வீட்டின் முன்பு அதிகாலையில் காகம் கரைந்தால் தம் வீட்டிற்கு விருந்தினர் வருவார் என்ற நம்பிக்கை உள்ளது விருந்தினர் விருந்து உண்டு வீட்டுவாழை இலையை உள்பக்கம் மடித்தால் வீட்டில் மீண்டும் உண்ணும் வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கை மக்களிடம் காணப்படுகிறது விருந்தினர்கள் வீட்டை விட்டு சென்றதும் வீட்டை பெருக்கக் கூடாது அவ்வாறு செய்தால் அவர்களது உறவு முறை அருந்தி விடும் என்று நம்புகின்றனர் வீட்டில் உள்ளவர்கள் வெளியூர் செல்லும் பொழுது எண்ணெய் தேய்த்து குளிக்க கூடாது அவ்வாறு செய்தால் செல்பவர்களுக்கு தீங்கு நேரிடும் என்ற நம்பிக்கை நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது*

***“மருவில் தூவி சிறு கருங்காக்கையும்***
***அன்புடை மரபின் கிளையோடார் “(குறுந்.391)***

**வீடு பற்றிய நம்பிக்கைகள்**

சிவப்பு எறும்பு சாரை சாரையாக வீட்டிற்கு வந்தால் தீங்கு ஏற்படும் பிணம் வீட்டில் இருக்கும் பொழுது அடுப்பு மூட்டக் கூடாது விரைவில் வீடு பெருக்கினால் குப்பை வெளியே கொட்ட கூடாது வடதிசை நோக்கி வீடு கட்டக் கூடாது நிலைப்படியில் தலை வைத்து படுத்தால் லட்சுமி தங்க மாட்டாள் இவ்வகையான நம்பிக்கையினை போரிட மக்கள் கடைபிடித்து வருகின்றனர்

**தலையெழுத்து பற்றிய நம்பிக்கை**

போயிருந்த மக்களின் வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக்கொண்டு இந்நிலைக்கு தங்களின் தலையெழுத்து விதி போன்றவை காரணம் எனக் கருதி அமைதியாக செல்லும் நிலை மக்களிடம் காணப்படுகின்றது மக்கள் தங்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கு எல்லாம் தாங்கள் பிறக்கும் பொழுதே தங்கள் தலையில் பிரம்மன் எழுதி வைத்திருப்பது தான் காரணம் என நம்புகின்றனர்

**விளக்கு பற்றிய நம்பிக்கை**

போயரினமக்கள் நல்ல காரியங்களை பற்றி பேசிக்கொண்டிருக்கும் பொழுது திடீரென விளக்கு அணைந்தால் தீய சகுனமாக கருதுகின்றனர் இந்த நம்பிக்கை சங்க காலத்திலும் இருந்தது இதனை

"**நெடுநகர் வரைப்பின் விளக்கம் நில்ல" (புறம்280:3)**

என்ற புறநானூறு அடிகள் விளக்குகின்றன

**பல்லிபற்றிய நம்பிக்கை**

போயரின மக்கள் ஒரு செயல் காரணமாக செல்லும் பொழுது தலைவிரி கோலமான பெண்ணை கண்டால் தீய சகுனமாக கருதுகின்றனர் தமிழர்களின் வாழ்வில் பல்லிசொல்லுதல் முக்கிய இடம் பெற்றுள்ளன

"**பகுவாய் பல்லி படுதோறும் பரவி**
**நல்ல கூரை என நடுங்கி**
**புல்லென் மாலையோடு பபொருங்கொறரனே"**

**சத்தியம் செய்தல் பற்றிய நம்பிக்கை**

பொதுவாக அனைத்து நாட்டுப்புற மக்களிடையே அனைத்து உறுதிமொழிகளும் வாய்மொழியாகவே இருக்கின்றன அவற்றை நிறைவேற்றுவதும் வாக்குறுதி அளித்தவரின் மனசாட்சியை பொருத்துவதாகும் இந்நிலையில் உறுதி மொழியினை மீறினால் தெய்வத்தின் தண்டனை கிடைக்கும் என்ற அடிப்படையில் சத்தியம் செய்யும் வழக்கம் தோன்றியிருக்க வேண்டும் தலையில் அடித்து சத்தியம் செய்தல் கையில் அடித்து சத்தியம் செய்தல் கற்பூரம் அனைத்து சத்தியம் செய்தல் பால் தொட்டு சத்தியம் செய்தல் வேட்டி போட்டு தாண்டி சத்தியம் செய்தல் என பலவகையாகும் சத்தியத்தை மீறினால் தெய்வ தண்டனை கிடைக்கும் என்று போரிட மக்கள் நம்புகின்றனர்

**“வேட்டி போட்டு தாண்டித் தரேன்**
**கற்பூரத்தை கை போட்டு அனைத்து தரேன்”**
*என்ற பழமொழி அடிகளின் மூலம் விளக்குகின்றது*

***கிழமை பற்றிய நம்பிக்கை***

*அனைத்து இன மக்களும் கிழமை பற்றி நம்பிக்கையை கடைபிடிக்கின்றன* ***“செவ்வாய் முடிவு வெட்டினால் வறுமை தரும் பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது புதன்கிழமை பணம் கிடைப்பது நல்லது வெள்ளிக்கிழமை இரவு எந்த ஒரு பொருளையும் கொடுக்கக் கூடாது செவ்வாய் வருவாய் என்று சொல்வார் சனிக்கிழமை இறப்பிற்கு சென்றால் அங்கே தங்கக் கூடாது சனிக்கிழமை பிணம் புதைத்தால் கோழியும் சேர்த்து புதைக்க வேண்டும் இல்லையெனில் வீட்டில் மற்றொரு இறப்பு நேரிடும் என்று நம்பிக்கை இவ்வின மக்களிடையே காணப்படுகின்றது”[7] என தகவலாளர்செல்வி கூறுகிறார்***

***முடிவுரை***

*நிமித்தம் பற்றிய நம்பிக்கைகள் போயரின மக்களிடையே அதிகளவில் வேரூன்றியுள்ளதைக் காண முடிகின்றது கால்நடை களிடம் வாக்கு கேட்டுச் செயல் தொடங்குவதன் மூலம் அவற்றை தெய்வ நிலைக்கு உயர்த்துள்ளனர் கட்டுமானத் தொழிலின் காரணமாக இயற்கை பறவைகள் விலங்குகள் நெருங்கி இருப்பதால் அவைகளின் செயல்பாடுகளிலிருந்து பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டுள்ளன பண்டைய காலத்தில் போக்குவரத்து வசதி அதிக அளவில் இல்லாத காடுகள் நிறைந்த பகுதிகளில் மக்கள் வாழ்ந்தனர் மனிதர்களைக் காட்டிலும் விலங்குகளும் பறவைகளுமே அதிகத் தொலைவு பயணிப்பாவையாக இருந்தன.போயரின மக்களிடையே நேரம் நாள் கிழமை மாதம் திசைகள் போன்றவை பற்றிய நம்பிக்கை இவர்களிடம் நீங்கா இடம் பிடித்துள்ளன கனவுகளை வாழ்வில் நிகழப் போவதை அறிவிக்கும் சக்தியாகவும் இறந்தவர்களுடன் தொடர்பு கொள்ளும் கருவியாகவும் கருதுகின்றனர் நோய்பற்றி நம்பிக்கைகளாக மந்திரம் போடுதல் ஆரத்தி சுற்றுதல் கருப்பு கழித்தல் போன்றவைகள் நம்பிக்கைகள் மருத்துவ அமைந்து மக்களை காப்பதால் நான் இன்றைய அறிவியல் உலகில் இத்தகைய நம்பிக்கைகள் நிலைத்துள்ளன போயரின மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள் செயலை நேர்த்தியாக செய்வதால் அறிவுறுத்தல் மொத்தமாக இருத்தல் நோயிலிருந்து தன்னை காத்துக் கொள்ளுதல் உயிர்களை பாதுகாத்தல் வரும்முன் காத்தல் போன்றவற்றை அடிப்படையாக கொண்டாதாகும். இயற்கை அனைவருக்கும் பொதுவானது என்றாலும் அதனை வழிபடும் முறையானது இடம் காலம் சூழ்நிலை இனம் போன்றவற்றிற்கேற்ப மாறுகிறது இன்றைய காலகட்டத்திலும் போயிரின மக்கள் முன்னோர்கள் கடைப்பிடித்த நம்பிக்கையினை மாறாமல் பின்பற்றிப் செய்து வருகின்றார் என்பதைக் இக்கட்டுரின் வாயில் நம்மால் அறிய முடிகிறது*

***பார்வ நூல்கள்***

1. ஆ. சிவசுப்பிரமணியம் மந்திரம் சடங்குகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு-1988, ப.எண்.14
2. மாருதி தாசன் (தொ.ஆ), நர்மதாவின் தமிழ் அகராதி நர்மதா பதிப்பகம் தியாகராய நகர், சென்னை-600017, முதல் பதிப்பு-2008 ஜனவரி
3. ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் தமிழ் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், 31 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-800108, முதல் பதிப்பு, டிசம்பர் 2006, ப.எண்.701
4. சு.சக்திவேல். நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம், 31சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை -600108
5. பி. நாராயணன், நாட்டுப்புற நம்பிக்கைகள், செந்தமிழ் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு-2008, ப.எண்.122
6. தகவலாளர் வெங்கடாசலம், வயது 60, வெங்கடசமுத்திரம் தகவல் சேகரிக்கப்பட்ட நாள் 10.01.2023
7. தகவலர் செல்வி, வயது 50, பாப்பிரெட்டிப்பட்டி, தகவல் சேகரிக்கப்பட்ட நாள் 09.01.2023